அசல்

23. 2. 42 உ. போ. முத்துராமலிங்கம் பிள்ளை.

அசல் – 1 நகல் – இல்லை

சிவமயம்

உயர்திரு,

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி
டாக்டர். வே. சாமிநாதையரவர்கள் சமுகம்
தியாகராஜ விலாசம்
திருவேட்டீச்சுரன் பேட்டை
திருவல்லிக்கேணி, சென்னை.

அன்புமிக்க ஐயா,

அடியேன் உ. போ. முத்துராமலிங்கம் அநேக வணக்கம். தங்கள் குமாரர். எஸ். கலியாணசுந்தரமய்யரவர்கள் எழுதிய (30.1.42) கடிதம் கிடைத்தது முதல் சதா தங்களுடைய உடல் நலனையடையுமாறு எல்லாம்வல்ல இறைவனைத் தியானித்துக் கொண்டேயிருக்கிறேன். அவ்வாறே ஸ்ரீ முருகப் பெருமான் திருவருளால் தாங்கள் உடல் நலமெய்தி நல்ல சுகவாழ்வோடிருப்பீர்கள் என்பது திண்ணமாக எண்ணுகிறேன்.

நிற்க. அடியேன் தங்களுக்குத் தபால் மூலம் அனுப்பிய "வள்ளி வேட்கை" என்னும் காவியத்துக்கு தங்களது சாற்றுகவி கிடைக்கும்படி பிரார்த்திக்கிறேன். பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அதனை ஊன்றிக் கவனத்தோடு படித்துப் பார்த்து இரண்டொரு திருத்தம் திருத்தி அமைக்கும்படி தாக்கல் எழுதியும் அன்னாரின் சாற்றுகவி யொன்றும் கிடைக்கப் பெற்றேன். அவர்கள் செய்த பெருநன்றி ~~…~~ மிகவும் பாராட்டற்பாலதேயாகும். மற்றும் இவ் அறிஞர்களும் உயர்திரு. பண்டித. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும் சாற்றுகவி தந்துதவியுள்ளார்கள்.

தங்களுடைய சாற்றுக்கவி யொன்றையே அடியேன் அவைகளுக்கு நடுநாயகமணியாய்த் திகழ்தர அமைத்து அச்சிடமிக்க அவாவுடைய னாகவிருக்கிறேன்.

ஆனதால் அடியேன் மீது பேரருள்

அசல்

23.2.42 உ. போ. முத்துராமலிங்கம் பிள்ளை.

அசல் – 1 நகல் – இல்லை

புரிந்து "வள்ளி வெண்பா" என்னும் இந்நூலைப் பிரசுரிக்கத் சாற்றுக்கவியாகவோ அல்லது மதிப்புரையாகவோ தந்துதவும்படி மிகவும் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன். மன்னிக்கவும்

23.2.42 தங்களன்புள்ள

உ. போ. முத்துராமலிங்கம் பிள்ளை
(கடையநல்லூர்.)

நான் திருநெல்வேலிக்குப் போகிறபடியால் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பும்படியாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

விலாசம்.

உ. போ. முத்துராமலிங்கம் பிள்ளை,
(கடையநல்லூர்)

C/o. இம்பீரியல் பிரஸ்
கீழரதவீதி.
திருநெல்வேலி டவுண்.

அசல்

23. 2.42 உ. போ. முத்துராமலிங்கம் பிள்ளை.

அசல் - 1 நகல் - இல்லை

உயர்திரு,

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர், வே. சாமிநாதையரவர்கள்

சமூகம்

தியாகராய விலாஸம்

திருவேட்டீச்சுரன்பேட்டை

திருவல்லிக்கேணி

சென்னபட்டணம்

MADRAS.

உ. போ. முத்து ராமலிங்கம் பிள்ளை

. P. MUTHURAMALINGAM PILLAI,
(OF KADAYANALLUR.)
TUTICORIN.

அசல்

23.2.42 உ. போ. முத்துராமலிங்கம் பிள்ளை.

அசல் – 1 நகல் – இல்லை

